**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி**

அ.வ.எண்.30/2020 வா.சா. 1 கனகராஜ்

SOLEMNLY AFFIRMED IN ACCORDANCE WITH THE PROVISIONS OF OATHS ACT OF 1969 OF THE DAY OF 16.03.2026

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை தொடர்ச்சி**

1) வாதி சங்கத்தில் இருந்து நான் எப்போது பணி ஓய்வு பெற்றேன் என்றால் 30-12-2024 அன்று ஓய்வு பெற்றேன். தற்போது வாதி சங்கம் யார் நிர்வாகத்தில் உள்ளது என்றால் ராணி என்பவர் தனி அதிகாரியாக நிர்வகித்து வருகிறார். கூடுதல் சாட்சியம் அளிக்க வாதி சங்கத்தில் எனக்கு புதியதாக தீர்மானமோ , கடிதமோ கொடுக்கப்பட்டதா என்றால் இல்லை. ஆனால் முதலில் கொடுக்கப்பட்ட கடிதத்திலேயே வழக்கு முடியும் வரை சாட்சியம் அளிக்க அதிகாரம் வழங்கப்பட்டது. தற்போது கூடுதல் சாட்சியம் அளிக்கவும் கூடுதல் ஆவணம் சமர்ப்பிக்கவும் வாதி சங்கத்தில் எனக்கு புதியதாக தீர்மானமோ , கடிதமோ கொடுத்தால் தான் என்னால் சாட்சியம் அளிக்க இயலும் என்றும் நான் மேற்சொன்ன விளக்கம் தவறு என்றும் சொன்னால் சரியல்ல.

2) தற்போது தாக்கல் செய்து உள்ள இரு வாடகை ஒப்பந்தங்கள் பற்றி என் முதல் சாட்சிய வாக்குமூலத்தில் குறிப்பிட்டு இருந்தேனா என்றால் குறிப்பிட்டு இருந்தேன். நான் அவ்வாறு குறிப்பிடவில்லை என்றும் தற்போது தாக்கல் செய்து உள்ள ஆவணங்களுக்கும் வழக்கிற்கும் தொடர்பில்லை என்றும் சொன்னால் சரியல்ல. நகராட்சி சட்டவிதிகளின் படி முறையாக தான் அந்தந்த காலங்களில் வரி விதிப்பு ஏற்பட்டது என்றால் சரியல்ல. தற்போது நான் சாட்சியம் அளிக்க தகுதிநிலை அற்றவர் என்றால் சரியல்ல.

இச்சாட்சியம் என் முன்பு திறந்த நீதிமன்றத்தில் சாட்சி கூறியபடி நான் கூற தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அது சரி என்று அவரால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**ஒப்பம் /- (மு.ச. ஸ்ரீநாத்)**

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி

பொள்ளாச்சி